பெண்களின் சமூக மதிப்புகள்

முனைவர் தே. வீரா
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
மகளிர் கிறிஸ்தவக் கல்லூரி, நாகர்கோவில்

''பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து, அதை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகளைப் பெண்ணியம்'' என்று இதற்கு விதித்த ஒரு வரையறையைக் கார்டன் என்பவர் கொடுத்திருக்கிறார். இக்கருத்தையே ஜெயின் என்பர் பெண்ணியம் என்பதற்கு ''பெண்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து ஒரு ஆற்றலை உருவாக்கி, பெண்மை அதன் தன்மையில் ஆண்களோடு மாறுபட்டிருப்பினும், அது ஆண்மைக்கு நிகரானது என்பதைப் பெற்றுக்கொள்ள வைப்பது'' என்று விளக்கம் கொடுத்திருக்கிறார். இரண்டாவது உலகில் மக்களினத்திற்கு அடிப்படைக் காரணியாக விளங்கியவள் பெண். அப்பெண்ணானவள் பிறரைச் சார்ந்தே வாழ்கிறாள். ''பெமினிசம் என்ற சொல்லுக்கு, பெண்ணின் தன்மைகள், சமூகத்திலும், அரசியலிலும் ஆண்களுக்கு நிகரான உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கான கோட்பாடு, பெண்களின் உரிமைக்காகவும், தேவைகளை நிறைவேற்றவும் பெண்கள் சார்பாக அகராதிகள் பல பொருள் விளக்கத்தைத் தருகின்றன''.

காலந்தோறும் பெண்களின் சமூக மதிப்புகள்

பழங்காலத்தில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த பெண்கள் இடைக்காலத்தில் மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை புகுந்ததால் பல இன்னல்களை அனுபவித்தனர். தற்காலத்தில் பல்வேறு போராட்டங்களின் மூலம் அடிமை விலங்கேற்றிருந்தப் பெண்கள் கல்விக் கற்று ஆண்களுக்கு நிகராகப் பல்வேறு பணிகளைச் செய்து வருகின்றனர். அவ்வாறு வாழ்ந்த பெண்களின் சமூக மதிப்புகளை காலத்தை அடிப்படையாகக் கொண்டு ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பழங்காலப் பெண்கள்

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் நிலவுடைமையற்ற தாய்வழிச் சமூகமாக இருந்தது. வரலாற்றுக் காலத்தில் ஆணாதிக்கம் மற்றும் நிலவுடைமை தந்தைவழிச் சமூகமாக இருந்தது. சமுதாயத்தின் முன்னியப் பணிகளிலெல்லாம் பெண்கள் முதன்மை இடம்பெற்றிருந்தனர். முதல் சமூக அமைப்பு தாய்வழிச் சமூகம் என்பதனைக் குழந்தைகளைப் பெற்று பராமரிப்பதனால் மட்டுமல்ல வாழ்வில் இன்றியமையாத பல தேவைகளைப் புர்த்திச் செய்யும் உற்பத்தியாளர்களாகவும், பெண்கள் திகழ்ந்ததனால் ஆதி முதல் சமூக அமைப்பு தாய்வழிச் சமூகமே'' என ஹோபெட் பிற்போல்ட் கூறுகிறார்.

பயிர்த்தொழில், நெசவுத்தொழில் போன்ற தொழில்கள் வளர்ச்சியடைய கலப்பை என்னும் கருவி கண்டுபிடிக்கப்பட உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டது. இவ்வேளாண்மை புரட்சியானது மாற்றத்தை ஏற்படுத்தியது. இதனால் பெண்களுக்குரிய எல்லைகளை வகுக்கத் தொடங்கினர். பெண் வீட்டு வேலை செய்வதற்கும், ஆண் வெளியில் வேலை செய்வதற்கும் உரியவன் என்று கருத்து தோன்றியது.

வேதகாலப் பெண்கள்

பெண்கள் இல்லாமல் எந்தவொரு சமயச் சடங்குகளும், சமயம் தொடர்பாக செயல்பாடுகளும் முழுமையடையாது என வேதகாலத்தில் நம்பினர். ஆண்களுடன்

தத்துவப் போட்டியில் பங்கு கொண்டு வெற்றி பெற்றனர். இவர்கள் இசையிலும் நாட்டியத்தில் புலமை பெற்று விளங்கினர். சாதாரண மக்களிடையே ஒருதார மணமும், மன்னர்களிடையே பலதார மணமும் இருந்தது. ரிக் வேதகாலத்தில் சதி, உடன்கட்டை ஏறுதல், முகமுடி அணியும் வழக்கம் போன்ற சமுதாயச் சீர்கேடுகள் இருந்தன. பெண்கள் பிறந்தது முதல் இறப்பது வரை யாராவது ஒருவர் பாதுகாப்பில் இருக்க வேண்டும் என்றாலும் சுதந்திரமாக பொது இடங்களுக்குச் சென்றனர். பெண்களுக்கு சில கொடுமைகள் இருந்தாலும் சமுதாயத்தில் மதிப்பும், மரியாதையும் கொண்டு வாழ்ந்தனர்.

இதிகாசகாலப் பெண்கள்

இதிகாசகாலத்தில் இதற்கு முன்பு அனுபவித்த சமுதாய மதிப்பையும் மரியாதையையும் அவர்கள் அனுபவிக்கவில்லை. குடும்ப வாழ்வினைச் சிறப்பாக நடத்தி, குடும்ப உறுப்பினர்களையும் கவனிக்கும் பெண்கள் சிறந்த பெண்கள் என்று கருதப்பட்டனர். ''ஒரு பெண் வீட்டு நிர்வாகத்தைச் செவ்வனே நடத்த வேண்டும், கணவனின் சொத்து தொடர்பான வசூலையும், செலவையும் பராமரிக்க வேண்டும். உணவு தயாரிக்க வேண்டும். தர்மத்தின் விதிமுறைகளை நன்கு புர்த்தி செய்தல் வேண்டும்'' என மனுதர்மம் கூறுகிறது.

சுயவரம் மூலம் திருமணம் நடைபெற்றது. இந்த முறையில் நளன் - தமயந்தி திருமணமும், இராமன் - சீதை திருமணமும் நடைபெற்றது. விதவைகள் மறுமணம் ஆதரிக்கப்பட்டது. அரசு குலப்பெண்கள் விரும்பியபடி அரண்மனையை விட்டுச் செல்ல அனுமதி இல்லை. கோயில்களுக்கும், திருவிழாக்களுக்கும் பெண்கள் குறைந்த அளவே சென்றுவர அனுமதிக்கப்பட்டது.

சங்க காலப் பெண்கள் விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர். கணவன் தூங்கிய பின் தூங்கிய கணவன் எழுந்திருப்பதற்கு முன் எழுந்திருக்கும் வழக்கம் இருந்தது. விதவையினர் அணிகலன்கள் அணிவது கூடாது என்று வற்புறுத்தப்பட்டனர். சங்ககால விலைமாதர் ''பரத்தையர்'' என அழைக்கப்பட்டனர். பரத்தையர் வீட்டுக்குக் கணவன் செல்வதை மனைவியால் தடுக்க இயலவில்லை. கணவன் மீது கொள்ளும் அன்பினை வைத்தே பெண்களின் பெருமை அடையாளம் காணப்பட்டது.

பெண்ணிய கூறுகள்

''அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற்குரிய''

(தொல்காப்பியம், கள. நூற் 8)

அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு போன்றன பெண்ணுக்குரிய பண்புகளாகவும் சொல்லப்படுகிறது. மேலும் ''கற்பு'' பெண்ணிற்குக் கட்டாயமாக்கப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் பெண்ணின் உரிமை தடை செய்யப்படவில்லை. பெண் கல்வி, கேள்விகளில் ஓரளவு புலமை பெற்றிருந்தாள்.

''பெண் பிறவி இழிவுக்குரியது என்று யாரும் கருதவில்லை, (ஐங் : 257) மணக்கொடைக் கொடுமை இல்லை. (அகம் : 280) நல்லிற்பாவையன்ன நல்லோர் கணவன்'' என்று பதிற்றுப்பத்திலும் (61), ''மறுவில் கற்பின் வாணுதல் கணவன்'' என்று திருமுருகாற்றுப்படையிலும் (அடி - 6) பெண்ணுக்குப் பெருமை தேடித்தரும் வகையில் சான்றோர் குறிப்பிட்டுள்ளனர். சங்ககாலத்திலும் பெண்ணிற்குக் கற்பு வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆணைத் தலைமையாகக் கொண்ட குடும்பம் வரவேற்கப்படுகிறது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறளில்,

''மனைத் தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கை துணை'' (தி.கு. 51)

வள்ளுவர் கூறுவதிலிருந்து குடும்பம், கற்பு இரண்டும் பெண்ணிற்குத் தேவை என்று வலியுறுத்துவதை அறியமுடிகிறது.

தேசிய போராட்டத்தில் தீவிரப் பங்கேற்ற பாரதியார் பெண்கல்வி, பெண்விடுதலை குறித்து எழுதிய கவிதைகள் தமிழ் இலக்கியத்தில் பெண்ணியக் கூறுகளை அறிவதற்கான சான்றுகளாகத் திழ்கின்றன. "நாணமும், அச்சமும் நாய்களுக்கு வேண்டுமாம்" என்று சாடுவதோடு நில்லாமல்,

"மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொளுத்துவோம்""

"ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம்"

(பா.கவி. ப. 45)

என்று கூறிய பாரதியின் கவிதைகள், வரலாற்றில் நிலைத்த இடத்தைப் பெறுகின்றன.

பெரியாரைத் "தமிழ் இலக்கியப் பெண்ணிய முன்னோடி" என கூறலாம். அவர் கூறியதாவது, "பெண்களைப் புருசனுக்கு நல்ல பண்டமாக மாத்திரம் ஆக்காமல் மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றவும், கீர்த்தி, புகழ்பெறும் பெண்மணியாயிருக்கவும் வேண்டும். பெண்ணும், தனனைப் பெண்ணினம் என்று கருத இடமும், எண்ணமும் உண்டாகும்படியாக நடக்கவே கூடாது. நமக்கும் ஆணுக்கும் ஏன் பேதம்? ஏன் நிபந்தனை? உயர்வு - தாழ்வு ஏன்? என்ற எண்ணம் ஒவ்வொரு பெண்ணுக்கும் எழவேண்டும். ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், நம் பெண்கள், வெறும் போகப்பொருளாக ஆக்கப்படக்கூடாது. அவர்கள் புது உலகத்தைச் சித்தரிக்க வேண்டும்".

பெண்களுக்கு நம்பிக்கையுட்டும் கவிதைகள்

பெண்கள் கல்வியின்றி மூடப் பழக்கங்களில் சிறைப்பட்டு, சிந்திக்கும் திறன் இருந்தும் அவர்களின் திறமை வெளிப்பட இயலாமல் இல்லச் சிறையில் முடங்கியுள்ளனர். கல்வியிலும் மட்டுமன்றி வீரத்தின் விளைநிலமாகவும் பெண்கள் விளங்கினர். போர்க்களத்தில் தீரமுடன் போராடிய வீர மங்கையர்களையும் மறக்க முடியுமா? இல்லை என்ற பதிலே சரியாக இருக்கும். இன்று எழுத்தாளர்கள், இசையரசி கள், தலைவர்கள், சொற்பொழிவாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் என பல்வேறு துறைகளிலும் பெண்கள் கொடிகட்டிப் பறப்பது நாட்டிற்கும் வீட்டிற்கும் பெருமையே. பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்று நினைத்து சாதிக்க முயல வேண்டும்.

எழுத்தாளர் பவளசங்கரி தன் கவிதைத் தொகுப்பான கந்திற்பாலையில் பெண் சமூகம் சார்ந்த கவிதைகளை இயற்றியுள்ளார். இப்படைப்பில் உள்ள கவிதைகளில் சில பெண்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துவனாக இருக்கின்றன. பெண்களுக்கு நம்பிக்கையுட்டும் கவியாக கவிதைத் தொகுப்பில் மலர்ந்துள்ளது.

தமிழில் உயிர் எழுத்து, மெய் எழுத்து என இரு வகைகள் உண்டு. உயிரெழுத்து மெய்யெழுத்தின்றியும் மெய்யெழுத்து உயிரெழுத்தின்றியும் தனித்தியங்க இயலாது. அது போன்று உயிரும் மெய்யும் சேரும் எழுத்து உயிர்மெய் எழுத்து. இப்படி "அ" என்றால் உயிரெழுத்து, "ம்" என்றால் மெய்யெழுத்து, "மா" என்றால் உயிர் மெய்யெழுத்து, இதையெல்லாம் சேர்த்தால் உயிராகி உருவாக்கிய 'சுஅம்மாசுசு என்றும், என்றென்றும் தரணியினைப் போற்றும் தங்கத் தாரகை "அம்மா" என உருகிய கவிதையை,

"உயிர் கொடுத்தவளின் முதல் எழுத்து
உயிரெழுத்து மெய் வளர்த்தவளின்
இடையெழுத்து மெய்யெழுத்து
உயிரும் மெய்யும் சேர்த்தெனை
வார்த்தெடுத்தவளின் கடையெழுத்து
"மா" எனும் உயிர்மெய் எழுத்து - ஆம்
தமிழும் என்னையும் தரணி
போற்றும் ஒரேயினம்" (க.பா., ப. 49)

பவளசங்கரி கந்திற்பாவை எனும் கவிதையில் இளம்தாயானவள் கதையாய் பெதுமையாய் உள்ளம் நிறைந்த அன்புடன் இருக்கிறாள் என்ற கருத்தானது உன்னதமாக இருக்கின்றது. "உம் கருவறையே எம்

கல்லறையாய்'' என்ற தலைப்பில் எழுத்தாளர் பவளச் சங்கரி எழுதிய கவிதையில்,

''கருவும் உருவும் ஈந்தாய்
வேரும் விழுதும் விருட்சமாய்
தாலாட்டும் தனிப்பாட்டும் அளித்தேன்
தங்கமான என் செல்ல சிட்டுக்கு
பாசமும் நேசமும் பன்மடங்காய்
பகிராமல் பெருகியது பதவிசாய்'' (க.பா., ப. 49)

கவிதையில் பாசமும் நேசமும் பெருகியதாம் என்ற தாய் அன்பு கொண்ட கவிதைகளைச் சிறப்புடன் படைத்துள்ளார் பவளசங்கரி.

மேலும் கைம்மாறு கருதாத உறவு என்றால் அம்மா மட்டுமே. கருணையின் முழு உருவமும் அம்மா பெரிய மனிதனாக இருந்தாலும் தாலாட்டிற்கும், தாய் ஊட்டிவிடும் சோற்றிற்கும் மனமானது ஏங்கத்தான் செய்கிறது அல்லவா? என்று வினவுவது போன்று கவிதையைப் படைத்திருப்பது அழகாய் உள்ளது. மீண்டும் தாயின் கருவறைக்குள் குழந்தையாய் பிறக்க நீ அனுமதிப்பாயா? அம்மா? என்று அனுமதியுடன் இவ்வுலக வாழ்வை விட உன் கருவறைக்குள் இருப்பது? தனி மகிழ்ச்சியைத் தருவது தான் அப்படித்தானே என்று நம்மை வியப்புட்டும் தாய்மை கவிதை.

''கைம்மாறு கருதா கட்டுப்பாடு
கட்டவிழ்ந்த கருணை வெளிப்பாடு
தாலாட்டும் சோறூட்டும் தொடர்ந்தே
மடியும் மனமும் ஏந்தியே
காத்து நிற்கும் வரமாய்
புத்து நிற்கும் உயிரே
எமை மீண்டும் அனுமதிப்பாயா
உம் கருவறைக்குள்?'' (க.பா., ப. 50)

''அம்மாஎன்னும்பிரம்மா'' எனும்தலைப்பில் எழுத்தாளர் பவளசங்கரி கவிதை படைத்துள்ளார். அம்மா என்பவர் யார் தெரியுமா? பிரம்மாவாம். உலக பிரம்மாவின் வடிவமைக்கப்பட்ட சிற்பி போன்றவள் அம்மா. அன்பு, பண்பு, பாசம், நேசம், மனிதநேயம் கொண்டு குழந்தைகளைச் செதுக்கும் சிற்பி தான் அம்மா.

''அம்மா கைதேர்ந்ததொரு சிற்பி
பிண்டத்தைக் கொடுத்த பிரம்மாவுக்கு
அண்டத்தில் வாழும் உருவைச் செதுக்கிய சிற்பி
அன்புடன் பண்பும் பண்புடன் பாசமும்
சேர்த்தேச் செதுக்கினாள் சீரான உயிகொண்டு''
(க.பா., ப. 99)

என்று கவிதையாக்குகின்றார் பவளசங்கரி.

இவ்வாறு பெண்கள் காலந்தோறும் பல சமூக மதிப்புகளை பெற்றிருந்தனர் என்பதை இவ்வாய்வு கட்டுரை மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.